# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 183/மா/2025

நாள் 30.06.2026

B. சரவணன்
சென்னை–600 017 --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–9
பெருநகர சென்னை மாநகராட்சி
(2) உரிமையாளர்,
சார்மினார் பிரியாணி உணவகம்
சென்னை–600 014 --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 28.01.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2025 அன்று பெறப்பட்டு 183/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவர் தனது 28.01.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் R.T.I. சட்ட ஆர்வலராக இருந்து கொண்டு பொதுமக்களுக்கான பொது பணிகளை சட்ட ரீதியாக செய்து வருகிறேன். என் வீடு அலுவலகத்திற்கு செல்லும் வழியில் உள்ள சுமார் 1000 ஆயிரம் மீட்டர் தொலைவில் கதவு 232/92, சார்மினார் பிரியாணி உணவகம் டாக்டர் பெசன்ட் சாலை, ராயப்பேட்டை, சென்னை–600 014 என்கிற முகவரியில் உள்ள கட்டிடத்தின் தரை தளத்தில் சுமார் 5000 ஆயிரம் சதுரடியில் பிரியாணி கடை சுமார் ஒரு ஆண்டுகளுக்கு முன் புதுப்பித்து துவங்கப்பட்டது. இந்த உணவக கட்டிடத்தில் பார்க்கிங் வசதிகள் இல்லாததால் இங்கு

வரும் வாடிக்கையாளர்கள், தங்களது கனரக மற்றும் இரு சக்கர வாகனங்களை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை சாலைகளிலும் நடு சாலையிலும் வாகனங்களை நிறுத்துவதை புகைபட வீடியோ ஆதாரங்களுடன் 04.11.2024 அன்று புகார் செய்தேன். நடவடிக்கை இல்லை என்பதால் 09.12.2024 மேல்முறையீட்டு புகார்கள் செய்யப்பட்டது. அப்புகார் மனு, இம்மனுவுடன் இணைப்பு. போக்குவரத்து சம்பந்தமாக பார்க்கிங் வசதிகள் உள்ளதா என்று R.T.I. அதிகாரிகள் இணை ஆணையர் அவர்களிடம் கேள்வி கேட்கப்பட்டது 04.11.2024. அதே நாள் 04.11.2024 அன்று தீயணைப்பு துறை இயக்குநர் அவர்களிடம் R.T.I.யில் கேள்விகள் கேட்கப்பட்டது. இவ்வோட்டல்களுக்கு உரிமம் உள்ளதா என்று 04.11.2024 R.T.I. அதிகாரி வருவாய் துறை மண்டலம் 09 அதிகாரிகளிடம் கேள்விகள் கேட்கப்பட்டது. பதில் இல்லை என்பதால் 20.01.2024 அன்று தகவல் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டது. சுகாதார துறையிடம் அனுமதி இல்லை என்பதால் பதில் இல்லை. அத்துடன் புகார் செய்த மனு இம்மனுவுடன் இணைப்பு. தீயணைப்பு துறையிடம் உரிமம் பெறவில்லை என்று அளித்த பதில் மனு இம்மனுவுடன் இணைப்பு மற்றும் போக்குவரத்து, காவல் துணை ஆய்வாளர், அண்ணா சாலை. சென்னை–2, அவர்கள் 7/1/25 அன்று போக்குவரத்து காவல் துறையிடம் முறையான சட்ட அனுமதி எதுவும் பெறவில்லை. N.O.C.வழங்கவில்லை என்று அளித்த பதில் மனு இம்மனுவுடன் இணைப்பு. எனவே சட்ட விரோதமாக சட்ட விதிமுறைகளை மீறி முறையான அனுமதி எதுவும் பெறாமல் இயங்கி வரும் இவ்ஓட்டலை பார்க்கிங் வசதிகள் அமைக்கும் வரை சட்டப்படி விதிகளின்படி நடவடிக்கை எடுத்து பூட்டி சீல் வைக்கவும். மேலும் இச்சாலை முழுவதும் இயங்கி வரும் இதுபோல் போக்குவரத்துக்கு இடையூறாகவுள்ள வணிக வளாகங்கள் ஓட்டல்கள், கடைகள் அனுமதி இல்லாமல் இயங்குகிறது என்று நான் நன்கு அறிவேன். நான் கூறிய புகார்களை நேரில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்து நோ பார்க்கிங் போர்டுகள் அமைத்தும் நடைபாதை நடப்பதற்கே என்கிற வாசகம் பொருத்திய பதாகை சாலையில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

2. மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 04.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 22.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 29.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையர் (முதுநிலை) தனது 14.05.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"திரு. சரவணன் என்பவர் மண்டலம் 9, கோட்டம் 115ல் இயங்கி வரும் சார்மினார் பிரியாணி உணவகம் போதிய பார்க்கிங் வசதியின்றி பொதுமக்களுக்கு இடையூறாக இயங்கி வருவதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட தொழில் உரிமத்தை ரத்து செய்யவும், மேலும் உணவகம் சுகாதாரமற்ற முறையில் இயங்கி வருவதாகவும் தனது 04.11.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்திருந்தார்.

இதனை தொடர்ந்து முதுநிலை வருவாய் அலுவலர் மண்டலம்–9 அவர்கள் மூலம் 22.11.2024 அன்று சார்மினார் பிரியாணி உணவகத்தின் உரிமையாளர் திரு. K. லத்திக் அஹமத் அவர்களுக்கு மண்டலம்–9 வருவாய் துறையின் மூலம் கடிதம் அனுப்பப்பட்டது. அக்கடிதத்தில் தங்கள் உணவகத்தின் மீது புகார் மனு பெறப்பட்டதையும், அதில் தெரிவிக்கப்பட்டிருந்த புகார்களை குறித்தும் பதில் அளிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டது.

திரு. K. லத்திக் அஹமத், சார்மினார் பிரியாணி உரிமையாளர் உணவகத்தின் உரிமையாளர், உணவகத்தின்ஆவணங்களான FSSAI, Fire License,Trade License ஆகியவற்றை முதுநிலை வருவாய் அலுவலர் மண்டலம்–9 அவர்களுக்கு 13.12.2024 அன்று தபால் மூலம் சமர்ப்பித்துள்ளார்.

இதனை தொடர்ந்து, முதுநிலை வருவாய் அலுவலர் மண்டலம்–9 அவர்களால் சார்மினார் பிரியாணி, சென்னை–14 என்ற உணவகத்திற்கு போக்குவரத்து காவல்துறையின் தடையின்மை சான்று கோரி 26.12.2024, 06.01.2025, 20.01.2025 மற்றும் 24.02.2025 ஆகிய தேதிகளில் போக்குவரத்து காவல்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டது. 25.03.2025 அன்று போக்குவரத்து காவல் துறையால் தடையின்மை சான்று அளிக்கப்பட்டது.

மேலும், தீயணைப்பு காவல் துறையின் தடையின்மை சான்று கோரி 09.01.2025, 07.02.2025 மற்றும் 24.02.2025 ஆகிய தேதிகளில் தீயணைப்பு காவல்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இதுநாள் வரையில் தீயணைப்பு காவல்துறையின் தடையின்மை சான்று கிடைக்கப் பெறவில்லை.

இந்நிலையில், திரு. B. சரவணன் மனுதாரர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் சார்மினார் பிரியாணி உணவகத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட தொழில் உரிம நகல்களையும், சுகாதார துறையால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களையும் வழங்க கோரி 04.11.2024 அன்று மனுவும் மற்றும் 10.12.2024 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவும் அளித்திருந்தார்.

பொது தகவல் அலுவலர் / முதுநிலை வருவாய் அலுவலர், மண்டலம்–9 அவர்கள் 02.04.2025, 25.08.2025 மற்றும் 30.8.2025 ஆகிய தேதிகளில் கடிதத்தில் மனுதாரர் கோரியிருந்த தகவல்கள் மற்றும் அனைத்து ஆவணங்களாகிய Traffic Fire, Trade License, FSSAI இணைத்து மனுதாரருக்கு விவரங்கள் தகவலாக வழங்கப்பட்டது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்படும் தொழில் உரிமங்கள் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்தல் மார்ச் மாதம் முதல் தேதி தொடங்கி மாதம் முடியும் நாளான மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள் இணையதள மூலமாகவோ வணிக சங்கம் மூலமாகவோ, மண்டலத்திலேயோ அல்லது சிறப்பு முகாம் மூலமாகவோ புதுப்பித்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்படும் புதிய தொழில் உரிமத்திற்கு மட்டும் சுகாதார துறையின் தடையின்மை சான்று வழங்கப்படும் என்றும் தொழில் உரிமம் புதுப்பித்தலுக்கு சுகாதார துறையின் தடையின்மை சான்று கோரப்படுவதில்லை என்றும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.”

5. மனுதாரர் 22.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:—

"சென்னை டாக்டர் பெசன்ட் சாலை, ராயப்பேட்டை, கதவு எண்.232/92—ல் என்கிற முகவரியில் சார்மினார் பிரியாணி உணவகம் கட்டிடத்தின் தரை தளத்தில் சுமார் 5000 ஆயிரம் சதுரடியில் ஒரு ஆண்டுகளுக்கு முன் புதுப்பித்து துவங்கப்பட்டது. இந்த உணவக கட்டிடத்தில் பார்க்கிங் வசதிகள்,போக்குவரத்து காவல் துறையிடம் N.O.C. பெறப்படவில்லை என்று இம்முறைமன்றத்திற்கு மனு அளித்திருந்தேன்.

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 09ன் முதுநிலை வருவாய் அலுவலர் அவர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்கண்ட உணவத்திற்கு எதிரில் பார்க்கிங் வசதிகள் செய்யப்பட்டு, போக்குவரத்து மற்றும் தீயணைப்பு துறை சான்றுகள் பெறப்பட்டுள்ளதால் எனது கோரிக்கை மீது தீர்வு காணப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

6. முதல் எதிர்மனுதாரார் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9—ன் முதுநிலை வருவாய் அலுவலர் 22.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:—

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9—ன் 22.11.2024 நாளிட்ட கடிதத்திற்கு சார்மினார் பிரியாணி கடையின் உரிமையாளர் திரு. K.லத்திக் அஹமத் அவர்கள் உணவகத்தின் ஆவணங்களான FSSAI, Fire License,Trade Licence ஆகியவற்றை 13.12.2024 அன்று தபால் மூலம் சமர்ப்பித்தார். இதனை தொடர்ந்து மேற்கண்ட உணவகத்திற்கு போக்குவரத்து காவல்துறையின் தடையின்மை சான்று 25.03.2025 அன்று அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தீயணைப்பு காவல் துறையின் தடையின்மை சான்றும் பெறப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட உணவகத்திற்கு பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை.

மேற்கண்ட உணவகம் எவ்வித விதிமீறலும் இல்லாமல் இயங்கி வருகிறது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்."

7. இரண்டாம் எதிர்மனுதாரரான சார்மினார் உணவகத்தின் உரிமையாளரான திரு. K. லையிக் அகமத் என்பவர் 22.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:—

"மனுதாரர் புகார் மீது பின்வரும் சான்றிதழ்களை முறையாக பெற்றுள்ளேன்.

1) FSSAI Certficate,
2) Fire Licence,
3) Trade Licence

மேலும், எனது உணவகத்திற்கு வரும் வாடிக்கையாளர்களின் இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கரம் வாகனங்கள் நிறுத்த உணவகத்திற்கு எதிரே போதுமான பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, எனது உணவகம் எந்தவித விதிமீறலும் இல்லாமல் இயங்கி வருகிறது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.''

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், முதல் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையர் (முதுநிலை)–ன் அறிக்கை, முதுநிலை வருவாய் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான சார்மினார் பிரியாணி உணவக உரிமையாளர் திரு. K. லையிக் அகமத் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை. டாக்டர் பெசன்ட் சாலை, ராயப்பேட்டை, கதவு எண்.232/92–ல் என்ற முகவரியில் உள்ள கட்டிடத்தின் தரைதளத்தில் சுமார் 5000 சதுரடியில் ஓர் ஆண்டுக்கு முன்பு சார்மினார் பிரியாணி உணவகம் துவக்கப்பட்டது என்பதும், இந்த உணவக கட்டிடத்தில் பார்க்கிங் வசதிகள் இல்லை என்பதும், போக்குவரத்து காவல் துறையிடம் N.O.C.பெறப்படவில்லை என்பதும், இம்முறைமன்றத்திற்கு மனு அளிக்கப்பட்டது என்பதும், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 09ன் முதுநிலை வருவாய் அலுவலர் அவர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்கண்ட உணவத்திற்கு எதிரில் பார்க்கிங் வசதிகள் செய்யப்பட்டு போக்குவரத்து மற்றும் தீயணைப்பு துறை சான்றுகள் பெறப்பட்டுள்ளதால் தனது கோரிக்கை மீது தீர்வு காணப்பட்டுள்ளது என தெரிவித்திருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

சார்மினார் பிரியாணி கடையின் உரிமையாளர் திரு. K.லையிக் அகமத் என்பவர் உணவகத்தின் ஆவணங்களான FSSAI, Fire License,Trade Licence ஆகியவை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார் என்பதும், இதனை தொடர்ந்து மேற்கண்ட உணவகத்திற்கு போக்குவரத்து காவல் துறையின் தடையின்மை சான்று மற்றும் தீயணைப்பு காவல் துறையின் தடையின்மை சான்று ஆகியவை பெறப்பட்டுள்ளது என்பதும், பார்க்கிங் வசதி செய்யப்பட்டு உள்ளது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி சொந்தமான இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாமலும், எவ்வித விதிமீறலும் இல்லாமலும் இயங்கி வருகிறது என்பதும், முதல் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையர் (முதுநிலை)–ன் அறிக்கை மற்றும் முதுநிலை வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் புகாரில் தெரிவிக்கப்பட்ட (1) FSSAI Certficate, (2) Fire Licence, (3) Trade Licence ஆகிய சான்றிதழ்கள் முறையாக பெறப்பட்டுள்ளது என்பதும், தனது உணவகத்திற்கு வரும் வாடிக்கையாளர்களின் இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கரம் வாகனங்கள் நிறுத்த உணவகத்திற்கு எதிரே போதுமான பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது என்பதும், தனது உணவகத்தில் எந்தவித விதிமீறலும் இல்லாமல் இயங்கி வருகிறது என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரான சார்மினார் பிரியாணி உணவக உரிமையாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், சென்னை. டாக்டர் பெசன்ட் சாலை, ராயப்பேட்டை, கதவு எண்.232/92–ல் என்ற முகவரியில் சுமார் 5000 சதுரடி தரைத் தளத்தில் ஓர் ஆண்டுக்கு முன் துவங்கப்பட்ட சார்மினார் பிரியாணி உணவகம் கட்டிடம் குறித்து அளித்த புகார் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 09–ன் முதுநிலை வருவாய் அலுவலரால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்கண்ட உணவத்திற்கு எதிரில் பார்க்கிங் வசதிகள் செய்யப்பட்டு, போக்குவரத்து மற்றும் தீயணைப்பு துறை சான்றுகள் பெறப்பட்டுள்ளதாகவும் எவ்வித ஆக்கிரமிப்பு மற்றும் விதிமீறல் இல்லாமல் இயங்கி வருவதாக பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக தெரிவிக்கப்பட்ட நிலையில், மனுதாரர் மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. B. சரவணன்,
கதவு எண் 1, புது தெரு,
தியாகராய நகர், சென்னை–600 017.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 4, 4வது குறுக்கு தெரு, லேக்வியூ ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை–600 034.

(4) திரு. K. லையிக் அகமத்.
உரிமையாளர், சார்மினார் பிரியாணி உணவகம்,
எண் 232/92, டாக்டர் பெசன்ட் சாலை,
ராயப்பேட்டை, சென்னை–600 014.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

2/7/26
செயலாளர்.

2/7/26 2/10

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032